# PRESS CLIPPINGS

EQUATOR
Full Circle MPR Consulting

Region:

Client : Bangalore Nano 2008
Lead : 100 cr nano hub of city
Publication : Dina Mani
Date : 14 Dec 2008
Section : Pg-2
Method : Conference

# பெங்களூரில் ரூ.100 கோடியில் நானோ அறிவியல் தொழில்நுட்ப

பெங்களூர், டிச. 13: பெங்களூரில் ரூ.100 கோடி செலவில் நானோ அறிவியல் தொழில்நுட்ப நிறுவனம் அமைக்கப்படும் என்று பிரதமரின் அறிவியல் ஆலோசனை குழுத் தலைவர் விஞ்ஞானி சி.என்.ஆர். ராவ் தெரிவித்தார்.

நானோ தொழில்நுட்ப 2-வது மாநாடு மற்றும் விருது வழங்கும் விழாவை குடியரசுத் துணைத் தலைவர் ஹமித் அன்சாரி பெங்களூரில் சனிக்கிழமை தொடங்கிவைத்தார்.

மாநாட்டைத் தொடங்கிவைத்து ஹமித் அன்சாரி பேசியதாவது:

நானோ தொழில்நுட்பம் குறித்து அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் அதைப் பிரபலப்படுத்த வேண்டும். இத் தொழில்நுட்பத்தை எளிமைப்படுத்த வேண்டும். அப்போது மட்டுமே இத்தொழில்நுட்பம் குறித்து எல்லோரும் அறிந்து கொள்ள முடியும்.

வளர்ச்சி அடைந்த நாடுகளில் நானோ தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்பட்ட பொருள்கள் பொதுமக்களுக்கு தாராளமாகக் கிடைக்கிறது. அதுபோல் நானோ தொழில்நுட்பம் இந்தியாவிலும் வளர்ச்சி அடைய வேண்டும். அதற்கு ஏற்ப இந்தத் தொழில்நுட்பத்தில் வளர்ச்சி ஆராய்ச்சிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை விஞ்ஞானிகள் மேற்கொள்ள வேண்டும் என்றார்.




நானோ தொழில்நுட்பத்தில் சிறப்பான சேவை செய்துவரும் இந்திய தேசிய அறிவியல் அகாதெமி கௌரவ விஞ்ஞானி பேராசிரியர் டி. சக்ரவர்த்திக்கு 'நானோ தேசிய விருதை' பெங்களூரில் சனிக்கிழமை நடந்த மாநாட்டில் வழங்குகிறார் குடியரசு துணைத் தலைவர் ஹமித் அன்சாரி. உடன், பிரதமரின் அறிவியல் ஆலோசகர் சி.என்.ஆர். ராவ் (இடது), கர்நாடக உள்துறை அமைச்சர் வி.எஸ். ஆச்சார்யா (வலது).

மாநாட்டில் சி.என்.ஆர். ராவ் பேசியதாவது:

பெங்களூரில் நானோ அறிவியில் தொழில்நுட்ப நிறுவனம் ரூ.100 கோடி செலவில் 14 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட உள்ளது. அடுத்த இரு மாதங்களில் இதற்கான பணிகள் தொடங்கும். நானோ தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சியை இந்த நிறுவனம் மேற்கொள்ளும் என்றார்.

விழாவில் முதல்வர் எடியூரப்பா கலந்து கொள்வதாக இருந்தது. முதல்வர் அமெரிக்கா சென்றுள்ளதால் அவருக்குப் பதிலாக உள்துறை அமைச்சர் வி.எஸ். ஆச்சார்யா கலந்து கொண்டார். மாநாட்டில் ஆச்சார்யா பேசியதாவது:

நானோ அறிவியல் தொழில்நுட்ப நிறுவனம் தொடங்க நாட்டில் மூன்று இடங்கள் தேர்வு செய்யப்பட்டன. அதில் ஒரு நிறுவனத்